# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 66

ஏப்ரல் 2014

*தொகுப்பு:* **Dr. B. வில்லியம் தர்ம ராஜா**

**லூக்கா**

3251 உன்னையே நீ உயர்த்தாதே, நீ தாழ்த்தப்படுவாய்; உன்னை நீ தாழ்மைப்படுத்து, நீ உயர்த்தபபடுவாய் (18:14)

3252 சிறுபிள்ளையைப் போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள், அதில் நீ பிரவேசிப்பாய் (18:17)

3253 பொய்சாட்சி சொல்லாதே (18:20)

3254 உன் தகப்பனையும் உன் தாயையையும் கனம்பண்ணு (18:21)

3255 தரித்திரருக்குக் கொடு (18:22)

3256 ஒருவனிடத்தில் எதையும் அநியாயமாய் வாங்காதே (19:8)

3257 தேவனைப் புகழ் (19:38)

3258 ஜெபவீட்டைக் கள்ளர் குகையாக்காதே (19:46)

3259 தெரிந்ததை, சொல்ல வேண்டாமெனில், தெரியாது என்று சொல்லாதே (20:7) சொல்லேன் என்று சொல் (20:8)

3260 மற்றவர்கள் உன்னைத் தந்திரத்தினிமித்தம் புகழ்வார்கள் ஏமாறாதே (20:21,23)

3261 பார்வைக்கு நீண்ட ஜெபம் பண்ணுகிற வேதபாரகரைக் குறித்து எச்சரிக்கையாயிரு (20:47)

3262 வறுமையிலும் காணிக்கை கொடு (21:4)

3263 அநேகர் என் நாமத்தைத் தரித்துக்கொண்டு நான்தான் கிறிஸ்து என்றும், காலம் சமீபித்தது என்றும் சொல்லுவார்கள, அவர்களைப் பின்பற்றாதே (21:8)

3264 கவலைப்படாதிருக்கும்படி உன மனதிலே நிர்ணயம் பண்ணிக்கொள் (21:14)

3265 உன் பொறுமையினால் உன் ஆத்துமாவைக் காத்துக்கொள் (21:19)

3266 எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீ காணும்போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறி (21:20)

3267 உன் மீட்பு சமீபமாயிருப்பதால், நீ நிமிர்ந்து பார்த்து, உன் தலையை உயர்த்து (21:28)

3268 உன் இருதயம் பெருந்திண்டியினாலும், வெறியினாலும், லவுகீகக் கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கு, நீ நினையாத நேரத்திலே அந்தநாள் உன் மேல் வராதபடிக்கு எச்சரிக்கையாயிரு (21:34)

3269 இனிச் சம்பவிக்கப் போகிற(இவைகளுக்கெல்லாம் (21:5-35) நீ தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவானக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திரு. (21:36)

3270 இயேசுவின் உபதேசத்தைக் கேட்கும்படி அதிகாலமேயாயினும் (தேவாலயத்திற்குப்) போ (21:38)

3271 நீ பெரியவனாயிருந்தால் சிறியவனைப் போலவும், தலைவனாயிருந்தால் பணிவிடைக்காரனைப் போலவும் இரு (22:26)

3272 நீ குணப்பட்ட பினபு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து (22:32)

3273 நீ சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம் பண்ணு (22:40,46)



3274 முழங்கால் படியிட்டு ஜெபம் பண்ணு (22:41)

3275 தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து ஜெபம் பண்ணு (22:42)

3276 இயேசுவை மறுதலியாதே (22:57,60)

3277 இயேசுவைப் போல் மன்னிக்கும் குணம் கொண்டிரு. (23:34)

3278 உயிரோடிருக்கிறவரை மரித்தோரிடத்தில் தேடாதே (24:5)

3279 தீர்க்கதரிசிகள சொன்ன யாவையும் விசுவாசி (24:25)

3280 மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்பட வேண்டும் (24:47)

3281 தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதி (24:53)

**யோவான்**

3282 இயேசுவின நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவனாய் அவரை ஏற்றுக்கொள் (1:12)

3283 கர்த்தருக்க வழியைச் செவ்வை பண்ணு (1:23)

3284 "நீ எனக்கு பின் சென்று வா" (1:43)

3285 தேவாலயத்தை வியாபார வீடாக்காதிரு (2:16)

3286 மறுபடியும் பிறந்து விட்டாயா? மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டாய் (3:31)

3287 நீ ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டாய் (3:5)

3288 இயேசுவை விசுவாசி; கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவாய (3:16,36)

3289 இயேசுவை விசுவாசி; ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாய் (3:60)

3290 பொல்லாதவைகளை / பொல்லாங்கு செய்யாதே (3:19,20)

3291 ஒளியைப் பகையாதே 93:20)

3292 உன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு ஒளியினிடத்தில் வா (3:21)

3293 ஆவியோடும் உண்மையோடும் கர்த்தரைத் தொழுதுகொள (4:23,24)

3294 தேவன் உனக்குச் செய்ததை சாட்சி சொல்; அநேகர் அவர்மேல் விசுவாசமுள்ளவர்களாவார்கள் (4:39)

3295 நீ உபதேசம் பண்ணு; அதினால் இன்னும் அநேகம் பேர் விசுவாசிப்பார்கள் (4:41)

3296 உன மகன் (மகள்) வியாயாயிருந்தால் இயேசுவைக குணமாக்கும்படி வேண்டிக்கொள். (4:47)

3297 அதிகக் கேடானதொன்றும் உனக்கு வராதபடி பாவஞ்செயயாதே (5:14)

3298 ஜீவனை அடையும்படி நன்மை செய் (5:29)

3299 வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்; அவைகளால் உனக்கு நித்திய ஜீவன் உண்டு (5:39)

3300 தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையைத் தேடு (5:44)

---

**துதியுங்கள்!** நமது நிர்வாகக்குழு உறுப்பினரான சகோ. B. வில்லியம் தர்மராஜா அவர்கள் தங்களது உபயோகத்திலிருந்த TVS Super XL வாகனத்தையும், Hero Honda Splender Plus வாகனத்தையும் நமது ஊழிய மிஷனெரிகள உபயோகத்திற்கென்று காணிக்கையாக கொடுத்துள்ளார்கள். அவர்களையும் அவர்கள் குடும்பத்தையும் கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

# பரிசுகளில் ஓர் ஒப்பற்ற பரிசு!

**Dr. பொ. செல்வராஜ்** பொள்ளாச்சி

பரிசுகளில் பலவகை. பிறந்தநாள் பரிசு, திருமண நாள் பரிசு, கிறிஸ்துமஸ் பரிசு, புத்தாண்டு பரிசு, வெற்றிக்கான பரிசு, அன்பின் அடையாளமாக பரிசு இன்னும் கூறிக்கொண்டே போகலாம். இத்தகைய பரிசுகளில் எதுவாக இருப்பினும் அதைப் பெற்றுக்கொண்டவருடன் அதன் செயலாக்கம் நின்றுவிடுகிறது. ஆனால் தொடர்ந்து செயல்படும் பரிசொன்று இருக்கிறது. அதுதான் ஒப்பற்ற பரிசு என்று தலைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த ஒப்பற்ற பரிசு என்ன? அது பகிர்ந்து கொள்ள வேண்டிய பரிசு.

“பேதுரு இயேசுவை அணுகி, “ஆண்டவரே... ஒருவர் எனக்கு எதிராகப் பாவம் செய்து வந்தால் நான் எத்தனை முறை அவரை மன்னிக்க வேண்டும்? ஏழுமுறை மட்டுமா?’ எனக் கேட்டார். அதற்கு இயேசு... ‘ஏழுமுறை மட்டுமல்ல; எழுபது தடவை ஏழுமுறை என நான் உனக்குச் சொல்கிறேன்’ என்று பதில் கூறியதுடன் அந்த பதிலை நன்கு விளக்கும் வகையில் ஒரு உவமையைச் சொன்னார். பாரம்பரிய யூத முறைமையின்படி மூன்றுமுறை மன்னித்தால் போதும். அதை இருமடங்காக்கி அதோடு மேலும் ஒன்றுக்கூட்டி ‘ஏழு முறை மட்டுமா?’ என்று பேதுரு வினவியதாக வாசிக்கிறோம். இயேசுவின் மறுமொழியைப் பார்த்தால் மன்னிப்பிற்கு எல்லையே இல்லாததுபோல் தெரிகிறதல்லவா? இப்பொழுது கூறுங்கள் மன்னிப்பு என்பது ஓர் ஒப்பற்ற பரிசுதானே! இயேசு நமக்குக் கற்றுக்கொடுத்திருக்கும் மன்றாட்டில் ‘எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல எங்கள் குற்றங்களை மன்னியும்’ நம்முடைய குற்றம் மன்னிக்கப்படவேண்டுமென்று விரும்புகின்ற அனைவரும் பிறருடைய குற்றத்தை மன்னிக்கத் தயாராக இருக்கிறார்களா? அப்படி மன்னிக்கிற அனைவரும் நடந்த குற்ற சம்பவத்தை மறக்கத் தயாராக இருக்கிறார்களா? தன்னுடைய பெரிய கடன் மன்னிக்கப்பட்ட ஒருவன் தன்னிடம் மிகச்சிறிய கடன்பட்டிருந்தவனை மன்னியாமல் போனதால் தான் பெற்ற மன்னிப்பை இழந்த சம்பவம் இயேசு கூறிய உவமையில் இடம் பெற்றிருக்கிறது.

லூயிஸ் ஸ்மீட்ஸ் (Lewis Smedes) தன்னுடைய ‘மன்னிப்போம், மறப்போம் (Forgive and Forget) எனும் புத்தகத்தில் நமக்கு நல்லதோர் அறிவுரையைத் தந்திருக்கிறார். மன்னித்தல் என்பது ‘போகட்டும்’ என்ற அளவில் நின்றுவிடாமல் ‘மறக்கப்பட்ட நிலைக்கு’ வளர வேண்டும். முதலாவது, நமக்கு இழைக்கப்பட்ட குற்றத்தினால் நமக்கு ஏற்படும் ‘வேதனை’ தேவனிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இரண்டாவது, குற்ற சம்பவத்தை முற்றிலும் மறந்தவர்களாக குற்றம் இழைத்தவர்களுடைய வாழ்க்கையில் தேவன் செயல்பட வேண்டுமென்று ஜெபிப்பதோடு அவர்களுடைய நல்வாழ்விற்காக நாம் ஆர்வம் காட்டுகிறவர்களாகவும், அவர்களுடைய நலத்திற்காக அவர்களை வாழ்த்துகிறவர்களாகவும் இருக்க வேண்டும்.



'Forgiveness is a gift that keeps on giving' சரிதானே! நாம் பிறரை மன்னித்தால் நமக்கும் மன்னிக்கப்படும் என்ற செய்தியுடன் மத்தேயு 18ம் அதிகாரம் நிறைவடைகிறது ஆமென்!

## சிறுகுழு வேதாகம தியானம்

1. அப்போஸ்தலர் தெசலோனிக்கா சபையில் கண்ட இருவகை வளர்ச்சி என்ன? (1:3)
2. அப்போஸதலர்களைப் பெருமிதம் கொள்ளச் செய்த தெசலோனிக்கா சபையின் இரண்டு சிறப்புகள் யாவை? (1:4)
3. தெசலோனிக்கா சபையார் எதற்காகப் பாடுகளை அனுபவிக்க வேண்டியிருந்தது? (1:5)
4. தெசலோனிக்கா சபையினர் எதனால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவில் மகிமையடைய முடிந்தது? (1:12)
5. இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குமுன் என்ன நிகழ வேண்டியிருக்கிறது? (2:3)
6. தன்னை தேவனென்று காட்டிக்கொள்ளப்போகும் மனிதன் யார்? (2:4)
7. சாத்தான் அவனுக்குரிய வல்லமையோடு அற்புதங்களையும், அடையாளங்களையும் நிகழச் செய்வானா? (2:9)
8. சத்தியத்தின் அன்பை ஏற்றுக்கொள்ளாதவர்கள் எதை இழந்துபோவார்கள்? (2:10)
9. எவை வழியாக தேவன் தெசலோனிக்கா சபையாரை இரட்சிப்பிற்கென்று தெரிந்துகொண்டிருந்தார்? (2:13)
10. தேவன் தெசலோனிக்கா சபையாரை இரட்சிப்பிற்கென்று அழைக்க எதைக் கருவியாகப் பயன்படுத்தினார்? (2:14)
11. தெசலோனிக்கா சபையினர் எவற்றில் நிலைவரப்படவேண்டுமென்பது அப்போஸ்தலர்களின் எதிர்பார்ப்பு? (2:17)
12. சபைக்கு எதிர்ப்பு எதினால் வருகிறது? (3:2)
13. தெசலோனிக்கா சபையினரின் இதயங்கள் எவற்றிற்கு நேராகத் திருப்பப்பட வேண்டுமென்பது அப்போஸ்தலர்களின் விருப்பம்? (3:5)
14. அப்போஸ்தலர்கள் எவ்வகையில் தெசலோனிக்கா சபையாருக்கு முன்மாதிரியாக இருந்தார்கள்? (3:6-7, 10-11)
15. நன்மை செய்வதில் சோர்ந்துபோ வாய்ப்பிருக்கிறதா? அப்படியானால் நாம் என்ன செய்ய வேண்டும்? (3:13)
16. திருவசனங்களுக்குக் கீழ்ப்படியாதவர்களை நாம் எந்தமுறையில் அறிவுறுத்தவேண்டும்? (3:14-15)

# பொய்யை வெறுத்து உண்மையை நேசி

**சகோ. S. ஜெபராஜ்** President, Grace Ministries

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும் வளம்பெறவும் உங்கள் விசுவாச வாழ்வில் நிலைத்திருக்கவும் களைந்து போட வேண்டிய சில காரியங்களையும் விட்டு விலக வேண்டிய காரியங்களையும் குறித்து தியானித்து வருகிறோம். நாம் கிறிஸ்துவுக்காய் கனி கொடுக்கிறவர்களாய் மிகுந்த கனி கொடுக்கிறவர்களாய் ஜீவிக்க களைந்து போட வேண்டிய இன்னுமொரு காரியத்தையும் சிந்தித்து செயல்பட தேவன் விரும்புகிறார்.

அன்றியும் நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாய் இருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக் கடவன் (எபே. 4:25) எபேசு சபையின் விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்வை மேம்படுத்தும் அநேக காரியங்களை அப்போஸ்தலராகிய பரிசுத்த பவுல் அடிகளார் தெளிவுபடுத்தி காண்பிக்கின்றார். உண்மை அல்லாத எச்சொல்லும், எந்த செயலும், எந்தக் கிரியையும் பொய்யானது. சிலருடைய வாழ்க்கையில் உலக நன்மைகளையோ பெருமையையோ, மேன்மைகளையோ அடைவதற்கு பொய் பேசவும், பொய்யான செயல்களைச் செய்யவும் தயங்குவதில்லை. திட்டமிட்டே வேண்டுமென்றே, மனதில் தீர்மானித்தே பொய் பேசுகிறார்கள். இன்னும் சிலர் சூழ்நிலையைக் காரணம் காட்டி அவர்கள் அந்தச் சூழலில் தப்பித்துக் கொள்ளும்படி அவர்களை அறியாமலே பொய்பேசி விடுகின்றனர். நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள். உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள் (யோவான 8:44) உண்மைக்கு புறம்பான காரியங்கள் உன் சிந்தையில், நாவில் உருவாகுமானால் நீ ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளையாயிருக்க முடியாமல் நீங்கள் ஒரு மாய்மாலமான வாழ்க்கை வாழுகிறவர்களாய் இருப்பீர்கள். இரட்டை வேடம் போடுகிற வாழ்க்கை வேண்டாம். ஆலயத்திற்குச் செல்லும்போதும், தேவபிள்ளைகளைக் காணும்போதும் ஒருவிதமான பேச்சும், உலகத்திற்குள்ளே செல்லும்போதும் உலகத்திற்கேற்றவிதமாய் பேசுவதும் இரட்டை ஜீவியம் அல்லவா? இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய உங்களால் கூடாதே.

பிறனுக்கு விரோதமாய் பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக (உபா. 5:20) என்று வேதம் கற்றுக்கொடுக்கிறதே. இயேசு சொன்னார் : நீங்கள் இன்னும் உணர்வில்லாதிருக்கிறீர்களா? நீங்கள் இன்னும் அறியவில்லையா? இருதயத்திலிருந்து புறப்பட்டுவருகிற பொல்லாத சிந்தனைகளும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், பொய்சாட்சிகளும், தூஷணங்களும் மனிதனை தீட்டுப்படுத்தும். (மத். 15:19)



### நான் ஏன் பொய் சொல்லக்கூடாது?

தேவன் உண்மையுள்ளவர், இஸ்ரவேலின் ஜெயபலமானவர் பொய்சொல்லுகிறதுமில்லை; தாம் சொன்னதைப்பற்றி மனஸ்தாபப்படுகிறதும் இல்லை. மனம்மாற அவர் மனுஷன் அல்ல (1சாமு. 15:29). காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலை செய்தான். கர்த்தர் காயீனை நோக்கி : உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே? என்றார். அதற்கு அவன் : நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான். (ஆதி. 4:8,9). காயீன் சகோதரனை கொலை செய்ததுமல்லாமல், தேவனிடத்தில் பொய் சொன்னபடியால் நீ பூமியில் சபிக்கப்பட்டிருப்பாய்; நிலத்தை பயிரிடும்போது அது தன் பலனை இனி கொடாது நீ நிலையற்று அலைகிறவனாயிருப்பாய் என்ற சாபத்தைப் பெற்றான் (அதி. 4:12). நாம் கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும் இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம். (1யோ. 1:6). யோபுவைக் குறித்து வேதமும் தேவனும் சாட்சி கொடுக்கிறார்கள். அவன் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்கு பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய மனுஷன (யோபு 1:1,8). எல்லாவற்றையும் இழந்து போனாலும், உத்தமத்தையும், தெய்வ பயத்தையும் இழந்து போகவில்லை. எனவேதான் கர்த்தர் யோபுவின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார்.

அன்றியும் பொய்யாணையிடாமல், உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். வானத்தின்பேரிலும் சத்தியம் பண்ணவேண்டாம்; பூமியின் பேரிலும் சத்தியம் பண்ண வேண்டாம். உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள். (மத். 5:33-36). ஒருவனும் பிறனுக்கு விரோதமாய்த் தன் இருதயத்தில் தீங்கு நினையாமலும், பொய்யாணையின்மேல் பிரியப்படாமலும் இருங்கள். இவைகளெல்லாம் தேவன் வெறுக்கிற காரியங்கள் (சகரி. 8:17). ஆகையால் நான் எந்த சூழ்நிலையிலும் பொய் சொல்லவோ, பொய்யாணையிடவோ மாட்டேன் என உறுதிகொள்ளுங்கள்.

### நான் ஏன் உண்மை பேச வேண்டும்?

கர்த்தரோ உண்மையுள்ளவர் (2தெச. 3:3). கர்த்தர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார் (1யோ. 1:9). அவருடைய கட்டளைகள் எல்லாம் உண்மையானவை (சங். 111:7). கர்த்தருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது (சங். 100:5). நாம் உண்மையில்லாதவர் களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கும் (2தீமோ. 2:13). ஆகையால் தேவனுடைய பிள்ளையாகிய நீயும் எல்லாவற்றிலும் உண்மையாய் இருக்கவும், உண்மையே பேசவும் விரும்புகிறார். அனனியா என்பவன் தான் விற்ற காணியாட்சியின் கிரயத்தில் ஒரு பங்கை அனனியா வஞ்சித்து வைத்து, ஒரு பங்கைக் கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான். பேதுரு அவனைப்

பார்த்து நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணம் கொண்டதென்ன? நீ மனுஷனிடத்தில் அல்ல தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்றான். அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்கவே, விழுந்து ஜீவனை விட்டான். அவன் மனைவியாகிய சப்பீராளிடத்தில் பேதுரு கேட்டபொழுது அவள் ஆம் இவ்வளவுக்குத்தான் என்றாள். அவளும் அவன் பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள். (அப. 5:1-10). தேவனுடைய காரியத்திலானாலும் உலக காரித்திலானாலும் நீ உண்மையாய் இருக்க வேண்டுமென்பதே தேவனுடைய எதிர்பார்ப்பு. தேவனுடைய நியாயத்தீர்ப்பு உன் மீது இருப்பதாலே உன்னில் உண்மை வேண்டும். இயேசுவானவர் கணக்கு கேட்கிற எஜமானாக திரும்பி வரும்பொழுது உன்னைப் பார்த்து, நல்லது, உத்தமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்று கூறவேண்டும். (மத். 25:21,23). இதுவே நீ வாழ்ந்த இந்த உலக வாழ்க்கைக்கு உன்னைக்குறித்து தேவன் கொடுக்கிற சான்றாக, சாட்சியாக இருக்க வேண்டும்.

## எப்படி பொய்யை களைந்து போட வேண்டும்?

உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர் (1கொரி. 1:9) வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் (எபி. 10:23). ஆவியின் கனி சகல நற்குணத்திலும் உண்மையிலும் விளங்கும். மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டுமெனில் தேவ ஆவியினால் நிரப்பப்பட்டவர்களாய் வாழ வேண்டும் தேவனுக்கு முன்பாக மனஉண்மையாய் இருக்கவேண்டும் (சங். 18:23). உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் (நீதி. 28:20). ஆவியோடும் உண்மையோடும் தேவனைத் தொழுதுகொள்ள வேண்டும் (யோவா. 4:24). தேவனுக்கு முன்பாக உண்மையாய் நடந்து கொள்ள வேண்டும் (2இரா. 20:3). மற்றவர்களுடைய காரியத்திலும் உண்மையாய் இருக்க வேண்டும். நீங்கள் அன்பில் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும் (2கொரி. 8:8). தேவனுடைய காரியத்தில் உண்மை உள்ளவர்களாயிருக்க வேண்டும். மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். (எபி. 3:2). பொய் சொல்லுதல், பொய்சாட்சி சொல்லுதல், பொய் ஆணையிடுதல் இவைகளை முற்றிலும் தவிர்த்து விட தேவ ஒத்தாசையுடன் ஜெபித்து செயல்படுங்கள்.

**எனது விசவாச வாழ்வு அறிக்கை :** தேவகிருபையால் பரிசுத்த ஆவியின் பெலத்தோடு பொய்யை களைந்து பிறருடனே மெய்யைப் பேச அர்ப்பணிக்கிறேன்.

*தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்*

நாள் : 2014 ஏப்ரல் 29 – கடைசி செவ்வாய்
நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய
இடம் : காமராஜர் திருமண மண்டபம்,
பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.

*தேவசெய்தி :* சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்



# ஜெயங்கொடுக்கும் தேவனுக்கு கோடி கோடி ஸ்தோத்திரம்



என் பெயர் ஜெ. ஆனந்த் சந்தோஷ் கிரேஸ்ஸன். என் பெற்றோர் திரு. ஜெயமணி, திருமதி. புஷ்பலீலா இருவரும் ஆசிரியர்கள். எனது ஊர் தூத்துக்குடி. என் தாயார் S.L.E. என்ற வியாதியினாலே பாதிக்கப்பட்டவர்கள். ஆகவே நான் என் தாயின் வயிற்றில் இருக்கும்போதே நான் பிறப்பது மிகப்பெரிய கேள்வியாகிவிட்டதாம். என் தாயாரும் மிகவும் கஷ்டப்பட்டார்கள். பெரும்பாலான நாட்களை மருத்துவமனையிலேயே கழித்தார்கள். ஆயினும் நான் கர்த்தருடைய கிருபையினாலே சுகமாய் பிறந்தேன். பிறந்த பின் ஓரிரு நாட்களில் நான் பிழைப்பது கடினம் என்ற சூழ்நிலை ஏற்பட்டது. மஞ்சள் காமாலை அதைத்தொடர்ந்து நிமோனியா என ஒவ்வொன்றாய் தாக்கியது. திருநெல்வேலி கெட்வெல் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றேன். கர்த்தருடைய கிருபையால் சுகம் பெற்றேன். இவ்வாறாக கஷ்டப்பட்டு பிறந்து வளர்ந்து வந்தேன்.

நான் L.K.G. முதல் 3ம் வகுப்பு வரை Johnson English School-லும், 4 முதல் 7ம் வகுப்பு வரை A.P.C.V. Matric Hr. Sec. School-லும், 8ம் வகுப்பு முதல் B.M.C. Matric Hr. Sec. School லும் படித்து வருகிறேன். படிப்பில் முழுக்கவனம் செலுத்த முடியாமல் இருந்தேன். கடந்த ஆண்டு X Std-ல் வகுப்புத் தேர்வுகளில் (Class Test) முதல் மாணவனாய் வருவதற்கு எவ்வளவோ முயற்சித்தும் என்னால் முடியவில்லை.

கர்த்தருடைய கிருபையால் அவரைத் தேடுவதில் மிகவும் கவனமாய் இருந்தேன். நான் சிறுவயதிலிருந்தேன், பாடம் படிக்கும் முன்பு வேதம் வாசித்து, ஜெபிப்பேன். ஆலயம் ஒழுங்காகச் செல்வேன். பாடகர் குழுவில் உற்சாகமாய் பங்கு பெற்றேன். என் பெற்றோரும் மற்றவர்களும் எனக்காக அதிகமாக ஜெபித்தார்கள். ஆசிரியர்களும் பெருமுயற்சி எடுத்தார். நான் அரசுத் தேர்வு நடைபெறும் நாட்களில் தினமும் காலையில் ஆலயம் சென்று ஆராதனையில் பங்கு பெற்றேன். ஆராதனைக்குப்பின் சபை ஊழியர் ஜெபித்து அனுப்பினார்கள். தேர்வு எழுதின பின்பும் Result வரும் வரை தொடர்ந்து நானும் என் பெற்றோரும் ஜெபித்து வந்தோம். கர்த்தருடைய பெரிதான கிருபையால் 495/500 மதிப்பெண் கொடுத்து, State 4th District 3rd & School 1st வருவதற்கு தேவன் உதவி செய்தார். அவருக்கே துதி, கனம், மகிமை உண்டாவதாக.

நெரிந்த நாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும்... (ஏசாயா 42:3) காக்கிற தேவன், என்னுடைய வாழ்க்கையிலும் நல்ல மதிப்பெண் கொடுத்து தம்முடைய நாமத்தை என் மூலமாய் மகிமைப்படுத்தினார். அல்லேலூயா. தொடர்ந்து என்னுடைய மேற்படிப்புக்காகவும், எதிர்காலத்துக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள். தேவனுக்கே மகிமை

# மிஷனெரி ஆலய பிரதிஷ்டை

தூத்துக்குடி மாவட்டம் வேம்படிவிளை திருப்புளியங்குடி கிராமத்தில் நமது 19வது புதிய மிஷனெரி ஆலயம் 02.03.2014 ஞாயிறு அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. தேவன் நமக்குத் தந்த பாரத்தின்படி தூத்துக்குடி மாவட்டத்தின் புண்ணியத்தலங்களான நவதிருப்பது என்ற அழைக்கப்படும் ஒன்பது இடங்களிலும் ஊழியம் செய்ய ஏவப்பட்டோம். தற்போது 4 இடங்களில் ஊழியம் நடைபெறுகிறது. இதில் முதலாவதாக இங்கு நமது மிஷனெரி ஆலயம் பல எதிர்ப்புகள் நடுவில் கட்ட தேவன் கிருபை செய்தார்.

இந்த ஆலயத்தை மதுரையில் உள்ள சகல பரிசுத்தவானகளின் ஆலயத்தினர் தங்கள் உதாரவத்துவமான ரூ. 2 இலட்சத்து 20 ஆயிரம் கொடுத்து தாங்கினார்கள். சபைபோதகர் Rev.V.T. ஜாண்சன் அவர்கள் மற்றும் சபை கமிட்டி சபையார் யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் நன்றி கூறுகிறோம்.

மேலும் மதுரையை சேர்ந்த ஒரு குடும்பத்தினர் ரூ. 2,50,000 கொடுத்து தாங்கினார்கள் மற்றும் தூத்துக்குடி கீதாநகர் CSI சபையைச் சேர்ந்த சில குடும்பத்தினர் ஆலய மேற்கூரை கான்கீரிட் அமைக்க மனமுவந்து செலவுகளை பொறுப்பெடுத்து முன்நின்று செயல்பட்டார்கள். யாவருக்கும் நன்றி சொல்கிறோம். தேவன் கொடுத்த யாவரையும் ஆசீர்வதிப்பாராக.

போதகர் P.S. சாமுவேல் செல்வராஜ் (Former Treasurery அவர்கள் ஜெபத்துடன் பிரதிஷ்டை செய்து செய்தியளித்தார்கள். மதுரை சபை சார்பாக குழுவினர் கலநது கொண்டு ஆராதனையை சிறப்பித்தார்கள்.

இந்த மிஷனெரி ஆலய கட்டுமானத்திற்கு மிகவும் சிறப்பாக உழைத்த நமது மிஷனெரி சகோ. மோசஸ் குடும்பத்தினர் மற்றும் விசுவாசிகளுக்காய் தேவனைத் துதிப்போம்.


**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**
**தேவனுடைய கூடாரத்தில் திறப்பின் வாயில் ஜெபம்**

**2014 ஏப்ரல் 30, கடைசி புதன் - காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

*தேவசெய்தி :* **சகோ. P. இம்மானுவேல் தியாகராஜன்**
திராட்சப்பழத்தோட்ட ஊழியங்கள், தேவர்குளம்
**சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**

**நீங்களும் வாருங்கள்! கலந்து கொள்ளுங்கள்!**
**இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!**

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை-626 201. போன் 04562-258194




# *பணித்தளங்களில் தேவன் செய்த கிரியைகளுக்காய் தேவனைத் துதிப்போம்*

**தூத்துக்குடி மாவட்டம்**

பணித்தளம் : **திருவேங்கடம்** - இங்கு நடைபெற்ற உபவாச ஜெபத்திற்காகவும் அற்புதத்தின் மாலை ஜெபத்திற்காகவும் தேவனை துதியுங்கள்.

பணித்தளம் : **புதுக்கோட்டை** - நடுக்கூட்டுடன்காடு என்ற கிராமத்தில் நடைபெற்ற சிறுவர் முகாமில் 575 சிறுவர்கள் கலந்து கொண்டதற்காக துதிப்போம். மதர்தெரசா, சாமுவேல் பாலிடெக்னிக்கில் ஜெபக்குழு ஆரம்பிக்க திறந்த வாசலைத் தந்தார் கர்த்தரைத் துதியுங்கள்.

பணித்தளம் : **தாதன்குளம்** - சகோ. வில்சன் குடும்பத்தை கர்த்தர் ஆசீர்வதித்து திரும்பவும் சேர்ந்து வாழ கிருபை செய்தபடியாலும், சகோதரி. மேபலக்கு வேலை கிடைக்க கர்த்தர் உதவி செய்தபடியாலும் கர்த்தரைத் துதிப்போம்.

பணித்தளம் : **பேட்மாநகரம்** - நம்முடைய ஜெபத்தைக் கேட்டு ஆலய கட்டுமான பணிக்காக மூவாயிரம் செங்கல் கிடைக்க உதவி செய்த கிருபைக்காகவும், படுக்கையிலிருந்த சகோதரி. கணபதியம்மாள் அவர்களுக்கு ஜெபித்த போது எழுந்து நடக்க உதவி செய்த கர்த்தரைத் துதிப்போம்.

**திருநெல்வேலி மாவட்டம்**

பணித்தளம் : **மைப்பாறை** - சகோ. ராசுவின் கால்கள் நடக்க கர்த்தர் பெலன் கொடுத்ததற்காக... மரணப்படுக்கையில் இருந்த சகோ. குருசாமிக்கு கர்த்தர் சுகபெலன் கொடுத்ததற்காக... **அருணாச்சலபுரம்** சகோ. சுதர் பில்லிசூனியத்திலிருந்து சுகம் கொடுத்ததற்காக கர்த்தரைத் துதிப்போம்.

**விருதுநகர் மாவட்டம்**

பணித்தளம் : **சிவகாசி** - சகோதரி. சுப்பு பல வருடங்களாய் ஆறாமல் இருந்த புண் நன்றாக குணமாகி வேலைக்கு செல்லவும், சகோ. சதீஸ் முரட்டு குணங்கள் மாறி வேலைக்கு செல்லவும் கர்த்தர் உதவி செய்தபடியால் துதிப்போம்.

பணித்தளம் : பண்டிதன்பட்டி - சகோதரி. வெங்கடம்மாள் சர்க்கரை வியாதியிலிருந்து சுகம் கிடைத்ததற்காக... சகோதரி. மல்லிகா பிரசவத்தில் 2வது ஆண்குழந்தை கொடுத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**மதுரை மாவட்டம்**

பணித்தளம் : திரளி - குடும்ப முகாமில் 120 பேர் கலந்து கொண்டதற்காக துதிப்போம். சகோதரி. கீதாவுக்கு விடுதலை கிடைத்ததற்காக

**திருநெல்வேலி மாவட்டம்**

பணித்தளம் : அத்தியூத்து - சகோதரி. முத்துவுக்கு இருதய அறுவை சிகிச்சையை கர்த்தர் ஆசீர்வதித்ததால் கர்த்தரைத் துதிப்போம்.

**அரியலூர் மாவட்டம் (மிஸ்பா)**

பணித்தளம் : வெத்தியார் வெட்டு - சகோ. இராயரின் மனைவி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காக... காட்டாத்தூரில் நடைபெறும் ஜெபக்கூடுகையை கர்த்தர் ஆசீர்வதித்ததற்காக கர்த்தரை துதிப்போம்.

## *பணித்தளங்களுக்காய் முழங்காலில்*

### தூத்துக்குடி மாவட்டம்

பணித்தளம் : **திருவேங்கடம்** – புதிய ஆத்துமாக்கள் ஆராதனைக்கு கடந்து வர... சகோதரி. பிரியா குடும்பத்திலுள்ள போராட்டங்கள் மாறவும். திருமதி. இயேசு மரியாளுககு நல்ல வேலை கிடைக்கவும் ஜெபியுங்கள்.

**சின்னக்காளான்பட்டி** – சகோதரி. மாரியம்மாள் வயிற்றிலுள்ள கட்டி மறைய... சகோ. வேலுச்சாமிக்கு கண் பார்வை கிடைக்க... **சத்திரப்பட்டி** – சகோ. பவுல்ராஜ் குடும்பத்திற்கு விரோதமாக உள்ள மந்திரத்தின் கிரியை நிர்மூலமாகவும்....

பணித்தளம் : **அழகப்பபுரம்** – ஆலயத்தின் கட்டுமான பணியின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். சகோதரி. ஹேமா வலிப்பு நோயிலிருந்து விடுதலை பெறவும், சகோதரி. பார்வதி பிசாசு பிடியிலிருந்து விடுதலை பெறவம், சகோ. சுதாகர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெறவும், சகோ. துரைசிங்கம் சுகர், பிரஷர் மற்றும் உடல்நிலை சரியில்லாமல் இருக்கும் இவர்களுக்கு பூரண சுகம் கிடைக்கவும் ஆலயத்திற்கு கடந்து வரவும் ஜெபியுங்கள்.

**திருமலாபுரம்** – சகோ. செல்வதாஸ் அவர்களின் மகன் மற்றும் பேபி ராணி, பாமா ஐஸ்வர்யா ஆகியோர் 10ம் வகுப்புத் தேர்வில் நல்ல மதிப்பெண் எடுக்க ஜெபிக்கவும்.

பணித்தளம் : **புதுக்கோட்டை** – இயேசுவோடு இனிய மாலையில் கலந்து கொள்ளுகிற 10, +2 படிக்கிற மாணவிகள் நல்ல மதிப்பெண் பெற...

**வாகைகுளத்தில்** குடும்ப முகாம் நடைபெற தடைகள் மாறவும். அங்கு நடைபெறுகிற ஜெபத்தில் கலந்து கொள்கிற குடும்பத்தின் பெண்கள் மனந்திரும்ப.... குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபிக்கவும்.

பணித்தளம் : **தாளமுத்துநகர்** – சகோ. சுசிலனுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க... சகோதரி. செல்லத்தாய் காலில் சுகர் புண்ணினால் இருக்கிற வேதனை நீங்க... சகோதரி. மல்லிகா குடும்பத்தில் இருக்கிற பிரச்சனை மாறவும், குடும்பம் இரட்சிக்கப்படவும்... பி.இ. முடித்திருக்கும் சகோ. ஸ்ரீனிவாசனுக்கு நல்ல வேலை கிடைக்கவும் ஜெபிக்கவும்.

பணித்தளம் : **பேட்மாநகரம்** – கட்டப்பட்டு வருகிற ஆலய வேலைகள் சீக்கிரத்தில் நிறைவு பெறவும், ஆலய பொருளாதார தேவைகள் சந்திக்கப்படவும், மீனாட்சிப்பட்டியில் சுவிசேஷ ஊழியத்தின் தடைகள் மாறவும், பின்மாற்றத்திலிருக்கும் சகோ. தேவகிருபை மனந்திரும்பவும் ஜெபிப்போம்.

பணித்தளம் : **ஆண்டாள் நகர்** – சிறுவர் கூடுகை தடையில்லாமல் நடக்கவும், அல்லிக்குளம் கிராமத்தில் சகோ. சுடலைமணி வீட்டில் ஜெபக்கூட்டம் நடத்த ஒத்துழைப்பு தரவும் ஜெபிப்போம்.

### திருநெல்வேலி மாவட்டம்

பணித்தளம் : **மைப்பாறை** – இங்கு ஊழியம் செய்யும் சகோதரி எமிமாள் கால் பெலவீனத்தில் சுகம் கிடைக்க... **கலிங்கப்பட்டி** – சகோதரி. கனகா வயிற்றுவலியில் விடுதலை கிடைக்க ஜெபியுங்கள்.

பணித்தளம் : **தாதன்குளம்** – அரசகுளம் கிராமத்தில் வசிக்கும் ஆண்கள் இளம் வயதிலே மரணம் சம்பவிக்கிறது. இதனால் பெண்கள் இளம் வயதிலே விதவைகளாகிறார்கள். இந்த சாபம் நீங்கவும், கர்த்தருடைய பாதுகாப்பு இருக்கும்படியாகவும்... **சினார்குளத்தில்**



கர்த்தருடைய ஆலயத்திற்கு இடம் வாங்கும் தேவைக்காக...

பணித்தளம் : **கீழத்தட்டப்பாறை** – சிறுவன் சதீஷ் கை உடைந்த நிலையில் இருந்து பூரண சுகம் கிடைக்கவும், சகோதரி. உச்சி மகாளி (9ம் வகுப்பு) தலையில் உள்ள புண்களில் இருந்து விடுதலை கிடைக்கவும்....

### விருதுநகர் மாவட்டம்

பணித்தளம் : **ஏழாயிரம்பண்ணை** – சகோ. பவுல் கேன்சர் வியாதியில் இருந்து பூரணசுகம் பெறவும்... சகோதரி. ஜெயராணியின் சொந்த நிலம் அவர்களின் கரங்களில் கிடைக்க தடைகள் மாறவும்... பள்ளியாடி கிராமத்தில் வாலிபர் மத்தியில் ஜெபக்குழு ஆரம்பிக்கவும்...

பணித்தளம் : **சிவகாசி** – உண்டு உறைவிடப்பளளியில் ஆதறவற்று இருக்கும் தங்கை கௌரிக்காக (7 வயது) ஜெபிக்கவும். முத்துசாமிபுரத்தில் ஆலயம் கட்டுவதற்கான இடம் பத்திரம் முடிப்பதில் காணப்படும் தடைகள் மாறவும்... சகோதரி. நகோமிக்க கைவிரலில் காணப்படும் கட்டி மற்றும் சகோதரி. இராக்கம்மாளின் தலைவலி மாறவும் ஜெபிக்கவும்.

பணித்தளம் : **பண்டிதன்பட்டி** – சகோ. போஸ்கோ பாவ பழக்கத்தில் இருந்து விடுதலை கிடைக்க... சகோதரி. உமா மகேஸ்வரி கர்ப்பந்தரிக்க தடைகள் மாற... மலையூரணிப்பட்டியில் நடக்கும் ஜெபக்குழு மற்றும் ஆலந்தூர் கிராமத்தில் நடக்கும் சிறுவர் கூடுகைக்கும் தடைகள் மாற ஜெபியுங்கள.

பணித்தளம் : **ஜமீன்சல்வார்பட்டி** – சகோ. முத்துராஜ் கால்மூட்டு சுகமாக... சகோதரி. ஞானமணி இழுப்பு வியாதி பரிபூரணமாக சுகமாக...

பணித்தளம் : **சாத்தூர் ரூரல்** – சிறுவர் ஊழியம் தடையின்றி நடக்க... ஒத்தையால் கிராமத்தில் ஆலயம் கட்ட இடம் வாங்க தடைகள் மாற...

பணித்தளம் : **முக்கூட்டுமலை** – ஆலயத்திற்கு விரோதமாக எழுப்புகிறவர்கள் இரட்சிக்கப்பட... சகோதரி. பியூலா ஆசீர்வாதமான வீடு கிடைக்க... பூசாரி, மந்திரவாதி, சாமி ஆடுகிறவர்கள் மனந்திரும்ப...

### தூத்துக்குடி மாவட்டம்

பணித்தளம் : **ஸ்ரீமூலக்கரை** – சகோதரி.செல்வி கொடியரசி தொழில் ஆசீர்வதிக்கப்பட ஆலயத்திற்கு வர... சகோ. டேனியல் ராஜ்க்கு ஏற்ற துணை கிடைக்க... சகோ. பேச்சிமுத்து, சகோதரி வளர்மதி மனந்திரும்ப...

பணித்தளம் : **திருப்புளியங்குடி** – சகோதரி. பிரியா, புவனேஸ்வரி வலிப்பு நோயிலிருந்து விடுதலை கிடைக்க... சகோதரி. மாரிச்செல்வி, புனிதா, பிரபா, உஷா நல்ல வேலை கிடைக்க...

### திருச்சி மாவட்டம்

பணித்தளம் : **தோப்புப்பட்டி** – சகோ. தங்கம் உடம்பிலுள்ள கட்டி மறைய, சகோதரி. சவரியம்மாள், பால்ராஜ் குடும்பத்தினர் செய்வினை கட்டுகளிலிருந்து விடுதலை பெற...

### மதுரை மாவட்டம்

பணித்தளம் : **திரளி** – இந்து கோயிலில் நடக்கும் பொங்களுக்கு நமது மிஷனெரிகள், விசுவாசிகளிடம் வரி கேட்காமல் இருக்க... சகோ. செல்லப்பாண்டி மனைவிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க....

### திருநெல்வேலி மாவட்டம்

பணித்தளம் : **அத்தியூத்து** – சகோ. நாராயணத்தேவர் வியாதியிலிருந்து குணமாக...

சகோதரி. துரைச்சி கண்பார்வை தெளிவாய் தெரிய... ஆலயம் கட்ட நல்ல இடம் கிடைக்க... பணித்தளம் : **அய்யனேரி** – இங்கு ஆலயம் கட்ட அனுமதி கிடைக்க... சகோதரி. நேசமணி சுகப்பிரசவம் கிடைக்க... சிறுவர் கூடுகை தடையில்லாமல் நடக்க... VBS தேவைகள் சந்திக்கப்பட..

**அரியலூர் மாவட்டம்**

பணித்தளம் : **வெத்தியார்வெட்டு** – சகோ. வைத்திலிங்கம் அரசுப்பணி விரைவில் கிடைக்க... ஆலயத் தேவைகள் சந்திக்கப்பட... காட்டாத்தூர் கிராமத்தில் "இயேசுவும் ஓர் தலைவர்" என்ற எண்ணம் மக்களின் மனதில் இருந்து மாற, அறியாமை அகல...

## MECOGEN - V.B.S. 2014

இவ்வூழியம் விசேஷமாக கிராம சிறுவர்களுக்காக ஆலயமில்லா கிராமங்களை மையமாக வைத்து நடத்தப்படும் ஊழியமாகும். இந்த ஆண்டு 325 கிராமங்களுக்கும் மேலாக ஒவ்வொரு கிராமங்களிலும் 6 நாட்கள் நடத்தி அதன்மூலம் 16,500 சிறுவர்களுக்குச் சுவிசேஷத்தைச் சொல்லத் திட்டமிட்டுள்ளோம். மொத்த தேவை ரூ. 9 லட்சத்து 75 ஆயிரம்.

இந்த ஆண்டு நமது ஆலயம் இல்லா கிராம VBS கள் இயேசு எனக்காக என்ற பொது கருத்தில் ஆறு நாட்களும் கீழ்க்கண்ட ஆறு தலைப்புகளில் நடைபெறும்.

| | |
|---|---|
| முதல் நாள் | என்னை நேசிக்கும் இயேசு |
| 2வது நாள் | என்னை புதிதாக்கும் இயேசு |
| 3வது நாள் | என்னை பாதுகாக்கும் இயேச |
| 5வது நாள் | என்னை பயன்படுத்தும் இயேசு |
| 6வது நாள் | என்னை நித்தியத்தில் சேர்க்கும் இயேசு |

இதற்காக ஜெபியுங்கள்!

1. வெளி3:8இன்படி நாம் திட்டமிட்டபடி 325 கிராமங்களுக்கும் மேலாக கிராமங்களில் திறந்த வாசலை கர்த்தர் நமக்குத் தரும்படியாக...
2. சங்.49:2இன்படி சிறுபிள்ளைகள் செவிகொடுக்க...
3. மாற்.18:14இன்படி எல்லா சிறுவர்களும் இயேசுவை ஏற்றுக்கொள்ள..
4. ஏசா.54:17இன்படி எதிர்ப்புகள் மாற...
5. தன்னார்வ ஊழியர்களைப் பயிற்றுவிக்க நடைபெறும் 2 நாட்கள் பயிற்சி வகுப்புகளை தேவன் ஆசீர்வதிக்க..
6. இப்பணிக்குத் தேவையான 400 தன்னார்வ ஊழியர்களை தேவன் எழுப்ப...
7. நமது ஊழியர்களுடன் தன்னார்வ ஊழியர்கள் கிராமங்களில் பணி செய்யும்போது சக.9:8இன்படி தேவ பாதுகாப்பு இருக்க...
8. ஒரு சிறுபிள்ளைக்குச் சுவிசேஷம் சொல்ல ஆகும் செலவு ரூ. 75வீதம் 16.500 பிள்ளைகளைத் தாங்கும் விசுவாச தேவ பிள்ளைகளை அனுப்பித்தர அல்லது ரூ.3000 வீதம் கொடுத்து ஒரு VBS ஐ தாங்குவோரை தேவன் எழுப்ப..
9. கடந்த ஆண்டில் எதிர்ப்பினால் நடத்த முடியாமல் போன கிராமங்களில் தடைகளை மாற்றி, இந்த ஆண்டு நடத்த தேவன் கிருபை தர....



10. இந்த ஆண்டில் திட்டமிட்டுள்ள VBSகள் 325
11. இந்த ஆண்டு VBSஇன் மொத்த தேவை ரூ. 9 இலட்சத்து 75 ஆயிரம் சந்திக்கப்பட
12. நமது மிஷனெரிகளை தன்னார்வ ஊழியர்களை தேவன் வியாதி பெலவீனங்கள் தாக்காது காத்துக்கொள்ள...
13. VBSநடைபெறும் கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட தேவன் வாசல்களை திறக்க.
14 VBS நடைபெறும் கிராமங்களில் தேவன் செழிப்பை ஆசீர்வாதத்தைக் கட்டளையிட

## மிஷனெரிகள் தாங்கும் ஆராதனை

பாளையங்கோட்டை சகோ. P. சாம்ராஜ் ரேமா ஊழியங்கள் சார்பாக 18-1-2014 அன்ற நமது ஊழியத்தின் மிஷனெரி தாங்கப்பட்டார். சகோதரர் குடும்பத்தினருக்காய் அவர்கள் ஊழியங்களுக்காய் தேவனைத் துதியுங்கள்.

திருவனந்தபுரத்தை சேர்ந்த திரு. கிறிஸ்டோபர் சாலமோன் குடும்பத்தினர் 2014 ஜனவரி முதல் நமது ஊழியத்தின் மிஷனெரியை தாங்கி வருகின்றனர். அவர்களுக்காக தேவனைத் துதியுங்கள்.

சிவகாசியில்
கர்த்தருடைய சத்தம் வல்லமையுள்ளது சங். 29:4

**பரிசுத்த உபவாச ஜெப முகாம் 2014**

இடம்: **வானத்தின் வாசல்** சிவகாசி

நாள் : **2014 ஏப்ரல் 24,25,26** வியாழன், வெள்ளி, சனி

நேரம் : ஏப்ரல் 24 மாலை 5 மணி முதல் ஏப்ரல் 26 மதியம் 1 மணி வரை

பதிவு கட்டணம் ரூ. 50/-

கருப்பொருள் : **கர்த்தருடைய சத்தம்**

தேவ செய்தியாளர்கள் :
**சகோதரி. சுனித்தா சுகுமார்**
**சகோதரி. எஸ்தர் அருள்தாஸ்**
**சகோ. B. பொற்செல்வன் ஆசீர்**
**சகோ. டேவிட் கணேசன்**

ஆண்கள் பெண்கள் தங்க, தனித்தனி இடவசதி

தேசத்திற்காய், சபைக்காய் ஜெபிக்க சபை பாகுபாடின்றி குடும்பம் குடும்பமாக வாருங்கள்.

தொடர்புக்கு : கிருபையின் ஊழியங்கள், கிராம மிஷனெரி இயக்கம், முழு இரவு ஜெப ஐக்கியம், தெபோராள் ஜெபக்குழு மற்றும் மன்றாட்டு ஜெப ஐக்கியக்குழு
சகோதரி. குளோரி – 98047 14768

## எபிரேயரில் பிரதான ஆசாரியரான கிறிஸ்து

எபிரேயருக்கு எழுதின நிருபம் இயேசுவை பழைய ஏற்பாட்டின் நிறைவேறுதலாக சுட்டிக்காட்டுகிறது. மேலும் சிலுவையின் மேன்மையை நம்மை சிந்திக்க வைக்கிறது. சிலுவையில் இயேசு செய்து முடித்த மேன்மையான, முழுமையான, நித்தியமான நன்மைகளை நம்மை காணச் செய்கிறது. பிரதான ஆசாரியர் என்ற தலைப்பில் கிறிஸ்துவை தியானிக்க கீழே குறிப்புகளை தந்துள்ளோம். தியானியுங்கள்.

1. 2:17 இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியர்
2 4:14 மகா பிரதான ஆசாரியர்
3 4:15 பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியர்
4. 5:5 தேவனால் உயர்த்தப்பட்ட பிரதான ஆசாரியர்
5. 5:6 என்றென்றைக்கும் ஆசாரியர்
6. 5:10 மெல்கிசேதேக்கின் முறைமையின் படி பிரதான ஆசாரியர்
7. 5:10 தேவனாலே நாமம் தரிக்கப்பட்ட பிரதான ஆசாரியர்
8. 6:20 நித்திய பிரதான ஆசாரியர்
9. 7:17 அழியா ஜீவனுக்குரிய வல்லமையின் படியே பிரதான ஆசாரியர்
10. 7:20,21 ஆணையோடே ஆசாரியர்
11. 7:24 மாறிப்போகாத ஆசாரியர்
12. 7:26 நமக்கு ஏற்றவராயிருக்கிற பிரதான ஆசாரியர்
13. 7:26 பரிசுத்தரான பிரதான ஆசாரியர்
14. 7:26 குற்றமற்றவரான பிரதான ஆசாரியர்
15. 7:26 மாசில்லாத பிரதான ஆசாரியர்
16. 7:27 பாவிகளுக்கு விலகினவரான பிரதான ஆசாரியர்
17. 7:26 வானங்களிலும் உயர்ந்தவரான பிரதான ஆசாரியர்
18. 7:28 வசனத்தால் ஏற்படுத்தப்பட்ட பிரதான ஆசாரியர்
19. 7:28 பூரணரான குமாரான பிரதான ஆசாரியர்
20 8:2 பரிசுத்த ஸ்தலத்திலும் கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர்
21. 5:6 விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு பிரதான ஆசாரியர்
22. 9:11 வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியர்
23. 10:21 தேவனுடைய வீட்டின் மேல் அதிகாரியான மகா ஆசாரியர்

*தொகுப்பு :* சகோ. B. பொற்செல்வன் ஆசீர்



## நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

கடிதம் மற்றும் M.O. அனுப்ப தொடர்பு முகவரி :

**சகோ. B. பொற்செல்வன் ஆசீர்**

**கிருபையின் ஊழியங்கள்,** ஆபிரகாம் நகர், பெரியநாயகபுரம், தூத்துக்குடி-628 101.

Grace Ministries, Abraham Nagar, Periyanayagapuram, Tuticorin-628 101.

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.

## வாலிபர் வெற்றி முகாமிற்கான ஜெபக்குறிப்புகள்

**வெற்றி முகாம் – நடைபெறும் தேதி மே 22-24**

*தேவசெய்தி :* **சகோ. G. ஜேக்கப்** அநாதி சிநேகம் ஊழியங்கள், நாகர்கோவில்

**சகோ. G. அருள்தாஸ்** IFE மதுரை **சகோ. J. அற்புதராஜ் மர்காஷியஸ்** தூத்துக்குடி

**திருமதி. வசந்தி கிரேஸ் மோகன்தாஸ்** நெல்லை **மற்றும் நமது குழுவினர்**

இம்முகாம் நமது ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கத்தின் மூலம் வாலிப சகோதர சகோதரிகளின் ஆசீர்வாதத்திற்காக ஆவிக்குரிய வளர்ச்சிக்காக நடைபெறும் வருடாந்திர முகாமாகும். இந்த ஆண்டு முப்பெரும் முகாமாக நடைபெறாமல் வாலிபருக்காக மட்டும் விசேஷித்த முகாமாக நடைபெறவுள்ளது.

1. வெற்றி முகாமின் தேவை ரூ.1½ லட்சம் சந்திக்கப்பட
2. ஏசா43:5-7 வசனங்களின் படி தேவன் முகாமிற்கு வாலிப சகோதர சகோதரிகளைக் கொண்டு வரும்படியாக...
3. ஏசா44:3இன்படி முகாமிற்கு வரும் சந்ததியும் சந்தானமுள்ள வாலிபர் மேல் பரிசுத்த ஆவியாவரையும் ஆசீர்வாதத்தையும் தேவன் ஊற்ற..
4. ஏசா49:25இன்படி பராக்கிரமன் பிசாசினால் சிறைப்படுத்தப்பட்டவர்களும் பெலவந்தன் சாத்தானல் கொள்ளையிடப்பட்டவர்களுமான வாலிபர்கள் அநேகர் அசுத்த ஆவியின் வல்லமையினின்று விடுதலையாகி இந்த முகாமில் இரட்சிக்கப்பட.
5. அப்21:10இன்படி முகாமிற்கு வரும் வாலிபர்கள் தீர்க்கதரிசிகளாய் மாற..